Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# Women as Portrayed by Sangam

**Dr. R. Rajeswari,** Assistant Professor& Head, Dept of Languages,
M.O.P. Vaishnav College for Women, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-3620-8447**
**DOI: 10.5281/zenodo.14752666**

## Abstract

*In the Tamil society that values femininity, women have been the main focus of literature throughout time. From the time of "Tolkappiyam" to the present day, the dignity of women has been expressed in a noble manner. Sangam literature is full of facts about various women such as heroines, heroine's friends, nurses and heroes. On the one hand, literature has distinguished women as poets, warriors full of bravery and teachers who teach virtue to the king and on the other hand, they have done their work as wives worthy of their husbands and mothers who cherish home. On keeping this in mind, this article aims to portray the women shown by Sangam and explore their characteristics. The article also elaborates on "Tholkappiyam" and Sangam women from the literary point of view of women. The songs of the Sangam women poets, such as Adimandiyar, have brought out their valour, their bravery through "Tholkappiyam" and emphasised the role of Thalaivi, Nattrai, Thozhi, Sevili, and shown in Sangam literature.*

**Keywords:** *Tholkaappiyam*, Sangam Literature, Women, Women Poets.

## References

[1] Balasubramaniyan. Ku. Vae. *Purananuru* (Mulamum Uraiyum). NCBH, 2014.
[2] Balasubramaniyan. Ku. Vae. *Nattrinai* (Mulamum Uraiyum). NCBH, Chennai-98, 2014.
[3] Balasubramaniyan. S. Dr. *Sanga Kala Magalir*. Paari Nilaiyam, Chennai, 1983.
[4] Dhakshianamoorthy. A. Dr. Aingurunooru (Mulamum Uraiyum), NCBH, Chennai, 2014.
[5] Jayabal. R. Prof., Agananuru (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[6] Jeyakumari. S. Dr. "Sanga Ilakkiyangalil Pengalin Aalumai." *Puthiya Avaiyam*, 2023,
[7] Lenin, K. Dr. "Sanga Ilakiyathil Vazhviyal Nokkil Pengal." *Iniyavaikatral International Tamil Studies*, July 2021.
[8] Mohan, R. Prof. *Pathupaattu*, Part – 1. (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[9] Mohan, R. Prof. *Pathupaattu*. Part – 2, (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[10] Nagarasan, V. Prof. *Kurunthogai* (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.
[11] Rajeswari, R. Dr. *Tholkaappiya Pendir*. Dinamani, 2020.
[12] Subramaniyam. S.V. *Tholkappiya Theliyurai*, Manivasaga Pathipagam, Chennai, 2006.
[13] Viswanathan. A. Prof., *Kaliththokai* (Mulamum Uraiyum), NCBH, Chennai-98, 2014.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**



# சங்கம் காட்டும் பெண்கள்

**முனைவர் ரா. ராஜேஸ்வரி,** மொழித்துறைத்தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்,
எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3620-8447
**DOI: 10.5281/zenodo.14752666**

### ஆய்வுச்சுருக்கம்

*"சங்கம் காட்டும் பெண்கள்" எனும் தலைப்பிலான இக்கட்டுரையில், மகளிர் குறித்த இலக்கியப் பார்வையுள் தொல்காப்பியம் மற்றும் சங்ககாலப் பெண்கள் குறித்த கருத்துகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. ஆதிமந்தியார் முதலான சங்ககாலப் பெண்பாற்புலவர்களின் பாடல்கள்வழி வெளிப்பட்ட அவர்களது நெஞ்சுரம், வீரம் முதலானவையும் தொல்காப்பியத்தின் வழி தலைவி, நற்றாய், தோழி, செவிலி ஆகியோரின் பாங்கும் சங்க இலக்கியப் பாடல்களின் வழி பெண்களின் இயல்பும் இக்கட்டுரையில் நுவலப்பட்டுள்ளன.*

**திறவுச் சொற்கள்:** *தொல்காப்பியம்*, சங்க இலக்கியம், பெண்கள், பெண் கவிஞர்கள்.

### முன்னுரை

பெண்மையைப் போற்றும் தமிழ்ச் சமூகத்தில், காலந்தோறும் பெண்கள் இலக்கியங்களில் முதன்மை இடம்பெறும் மையங்களாகத் திகழ்கின்றனர். அவ்வகையில் தொல்காப்பியம் தொட்டு தற்காலம் வரை மகளிர்தம் மாண்பு வெளிப்படுத்தப்படுகின்றது. தலைவி, நற்றாய், தோழி, செவிலி, பரத்தை முதலான பல்வேறு பெண்கள் பற்றி சங்க இலக்கியம் நுவல்கின்றது. இலக்கியம் புனையும் புலவர்களாகவும் ஊக்கம் நிறைந்த வீரர்களாகவும் மன்னனுக்கே அறம் கற்றுத்தரும் ஆசான்களாகவும் ஒருபுறம் தனிச்சிறப்புற்றுத் திகழ, மற்றொருபுறம் கணவனுக்கேற்ற மனைவியாகவும் இல்லறம் போற்றும் இல்லாளாகவும் தன் பணியைச் செய்துள்ளாள். இவ்வெண்ணத்தைக் கருத்திலேற்று சங்கம் காட்டும் பெண்களைப் படம்பிடித்து அவர்தம் தன்மையினை நுவல்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### பெண்பாற் புலவர்கள்

'ஆணுக்குப் பெண் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்' எனும் கூற்றுக்கிணங்க அறிவிலோங்கிய வையமாகத் தமிழ்ச் சமூகம் சங்கந்தொட்டே திகழ்ந்தமையை சங்கப்பாடல்கள் சான்றாய்க் காட்டுகின்றன. ஆதிமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கைப்பாடினியார், நப்பசைலையார், நற்செள்ளையார், நன்முல்லையார், பொன்முடியார், முடத்தாமக்கண்ணியார், வெண்ணிக்குயத்தியார், வெள்ளிவீதியார் முதலான பெண்பாற்புலவர்களின் பாடல்கள் ஆணுக்கு நிகராய் அறிவிலோங்கி அக்கால மங்கையர் விளங்கிய நிலையைக் காட்டுகின்றன. இவர்களது பாடல்களின்வழி அக்காலப் பெண்களின்

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

வீரம், கல்வியறிவு, ஊக்கம், நெஞ்சுரம் முதலான பல்வேறு சிறப்பான நெறிகளைக் காணவியல்கின்றது. தம் கருத்தை மன்னனாகவே இருந்தாலும் மன உறுதியுடன் எடுத்துரைக்கும் மாண்பினை சங்காலப் பெண்பாற் புலவர்கள் கொண்டிருந்தனர். தற்காலம் வரை போற்றப்படும் மிகச் சிறந்த கருத்துகளைக் கற்காலத்தே துணிவுடன் கூறிய அவர்தம் பெருமை போற்றத்தக்கது. ஆண் – பெண் நட்பிற்குச் சான்றாகவும் மன்னன் மற்றும் புலவர்தம் ஒற்றுமைக்குக் காட்டாகவும் திகழ்வோர் அதியமான் மற்றும் ஔவையார் ஆவர். இவ்விருவருக்கும் நட்பு முகிழ்ப்பதற்கு முன்னர், ஔவையார் அதியமானிடம், **எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே (புறம்., 206, 13)** என்கிறார். இக்கூற்று அக்காலப் பெண்புலவரின் மனஉறுதியையும் யாருக்கும் அஞ்சாத நெறியையும் தெள்ளத் தெளிவாகக் காட்டகின்றது.

ஔவையார் அதியமானுடனான நட்பிற்காக நெடுங்கிள்ளிக்கும் அதியமானுக்கும் இடையே மூளவிருந்த போரினைத் தடுத்த துணிவுடையவர். வெண்ணிக்குயத்தியார், வளவனுக்கும் பெருஞ்சேரலாதனுக்கும் ஏற்பட்ட போரில் வளவனின் அம்பு சேரலாதனின் மார்பைத் துளைத்து முதுகை அடைந்தமையால் வடக்கிருந்த தன்மையினைக் கூறி, வளவனை விட சேரலாதன் சிறந்தவன் எனச் சுட்டும் அடிகளில் (புறம்.66) அப்பெண்பாற் புலவரின் ஆளுமையும் நெஞ்சுரமும் வெளிப்படுகின்றது.

**தொல்காப்பியம் காட்டும் பெண்டிர்**

தொன்மைச் சமூகத்தின் காலத்தையும் சூழலையும் படம்பிடிக்கும் கண்ணாடியாகத் திகழும் தொல்காப்யித்தில் அக்காலப் பெண்டிரின் இயல்பினை அறியமுடிகின்றது. பெண்களின் பண்பு குறித்துத் தொல்காப்பியர் கூறுமிடத்து,

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (தொல்.,பொருள். களவி. நூ.,8)**

என்கிறார். இம்மூன்று பண்புகளையும் பெண்கள் போற்றிய நிலையினைக் காணமுடிகின்றது.மற்றுமொரு நூற்பாவில்,

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான (தொல்.,பொருளியல். நூ., 15)**

என்கிறார்.

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர்க் காட்சிக் கற்புச்சிறந் தன்று (தொல்.,பொருள். களவி. நூ., 23)**

எனும் தொல்காப்பிய நூற்பா உயிரைவிடச் சிறந்ததாக நாணையும் நாணைவிட கற்பினைச் சிறந்ததாகவும் போற்றிய பெண்டிரின் தன்மையினைப் படம்பிடிக்கின்றது.

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெலியற் பொறையும் நிறையும் வல்லிதின்**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்.,பொருள். கற்பி. நூ., 11)**

எனும் நூற்பாவின்வழி, பெண்களுக்கான பண்புகள் வரையறுக்கப்பட்ட நிலையினை அறியமுடிகின்றது.

**முந்நீர் வழக்கம் மகடூவோடில்லை (தொல்.,பொருள். கற்பி. நூ.,11)**
**நாணும் மடனும் பெண்மைய ஆதலின்**
**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**
**நெறிப்பட வாரா அவள்வயினான (தொல்.,பொருள். களவி. நூ., 17)**

என்று தலைவிக்கான பண்புகள் வலியுறுத்தப்பட்டுள்ளமை அறியப்படுகின்றது.

தன்னுடைய மனத்தினுள் தோன்றும் வேட்கையினைத் தலைவன் கிளக்கும் நிலை தலைவிக்கு இல்லை என்பதை,

**தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை (தொல்.,பொருள். களவி. நூ., 27)**

என்னும் அடிகள் பறைசாற்றுகின்றன.

தலைவியுடன் நெருங்கிப் பழகும் பெண்ணாகத் திகழும் தோழி மதியிலும் மேம்பட்டவளாகத் திகழ்ந்துள்ளாள்.

**உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலான்**
**உரியதாகும் தோழிகண் உரனே (தொல்.,பொருளியல். நூ., 45)**

என்கிறது தொல்காப்பியம். "அறத்தொடு நிற்றல்" எனும் அரிய பகுதி, தோழியின் செம்மையினைக் காட்டுவதில் முக்கிய இடம்பெறுகின்றது.

தோழிக்கு அடுத்த நிலையில் தொல்காப்பியம் காட்டும் பெண் செவிலி.

**கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள**
**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**
**செவிலிக்கு உரிய ஆகும் என்ப (தொல்.,பொருள். கற்பி. நூ., 12)**

என்கிறது தொல்காப்பியம். நல்லவை உரைத்தல், அல்லவை கடிதல் எனும் மிகச்சிறந்த பண்பினைப் பெற்றிருப்பவள் தோழி என்பது அறியப்படுகின்றது. தொல்காப்பியம் பெண்களின் தன்மையினைச் சுட்டுமிடத்தில், கணவனை இறந்தோர் பூண்ட "தாபத நிலை" குறித்தும் கூறுகின்றது. இவ்வாறு பல நிலைகளில் தொல்காப்பியம் அக்காலப் பெண்டிரைக் காட்டினும்,

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான (தொல்.,பொருளியல். நூ., 1154)**

என்று முத்தாய்ப்பாக பெண்களைப் போற்றுகின்றது.

**விருந்துபுறத் தருதலும் சுற்றம் ஓம்பலும்**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


**பிறவும் அன்ன கிழவோள் மாண்ப (தொல்.,பொருள். கற்பி. நூ., 11)**

என்று தலைவியின் மாண்புகள் வரையறுக்கப்படுகின்றன.

தலைவி உரையின் தன்மை குறித்து கூறுமிடத்து,

**அருள் முந்துறுத்த அன்புபொதி கிளவி**

**பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே (தொல்., 1107)**

என்கிறது. அன்பு பொதிந்த சொற்களை அருளோடு மொழிதல் பெண்டிரின் பண்பெனத் தொல்காப்பியம் போற்றுகின்றது."தன்னைப் பற்றி மிகுமொழிகளைப் பேசும் பண்பு தலைவிக்கில்லை என்பதை,

**தற்புகழ்க் கிளவி கிழவன்முன் கிளத்தல்**

**எத்திறத் தானும் கிழத்திக் கில்லை (தொல்., 1126)**

என்பதால் உணரலாம்.

தன் தலைவனின் கருத்துக்கு எதிர்நின்று கருத்துரைக்காதவளாகத் தொல்காப்பியத் தலைவி திகழ்கிறாள்.

**சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்**

**அல்ல கூற்று அவள்வயி னான (தொல்.,பொருள். நூ., 108)**

சிறந்த பண்புகளின் இருப்பிடமாகக் காட்டப்படும் தொல்காப்பியத் தலைவி,

**தற்புகழ்க் கிளவி கிழவன்முற் கிளத்தல்**

**எத்திறத் தானும் கிழத்திக் கில்லை (தொல்.,பொருள். நூ., 178)**

என்று வாழ்பவள்.

மடலேறுதல் என்பது அக்காலப் பழக்கமாக இருந்துள்ளது. பனைமடலில் குதிரை உருவத்தினைச் செய்து தலைவன் ஊர்ந்து வருதலாகிய இந்நிலை தலைவிக்குப் பொருந்தாது.

**எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**

**பொற்புடை நெறிமை இன்மை யான (தொல்.,பொருள். அகத். நூ., 38)**

**மனையுரை மகளிர்க்கு ஆடவர் உயிர் (குறுந்., 135: 1-2)**

**சங்கமும் பெண்களும்**

சங்க காலப் பெண்கள் வீரச் செறிவுடையோராயும் கற்புக்கடம் பூண்டோராயும் திகழும் நிலையினைப் பாடல்களின்வழி அறியலாம். அன்பு, காதல், வீரம், நட்பு எனும் பல்வேறு வகைகளில் அவர்தம் தன்மையினை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

**இம்மைமாறி மறுமை ஆயினும்**

**நீ ஆகியர் எம் கணவனே**

**யாமாகியர்நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்., 49: 3-4)**

என்று தன் தலைவன்மீது கொண்ட காதல் மீதூறப் பாடுகிறாள் ஒரு தலைவி. எப்பிறப்பிலும் தன் கணவன்மீது கொண்ட அன்பு மாறாது என்பதை இவ்வரிகள் வழி உணர்த்துகிறாள்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

மற்றொரு தலைவன், தன் காதலின் அளவினை நிலம், வான், நீரென்று ஒப்பில்லா இயற்கையோடு ஒப்பிட்டு, தான் தன் தலைவன் மீது கொண்ட அன்பே சிறந்ததென்று உறுதியளிக்கிறாள்.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர்அள வின்றே (குறுந்., 3: 1-2)**

எனும் அடிகள், சங்கப் பெண்களின் வாழ்க்கைச் சாரமாக அமைகின்றன. சங்கப் பெண்டிர் வீரம் நிறைந்த ஆண்மகனையே திருமணம் செய்ய விழைந்தனர்.

**கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள் (கலி., 103)**

என்பதால் ஆயர்குலப் பெண்கள் காளைகளை அடக்குதல் எனும் ஏறுதழுவுதலில் வென்ற ஆண்களையே மணக்க விரும்பிய தன்மை அறியப்படுகின்றது. பாசறைப் பெண்டிர், தங்கள் உடையொடு வாளைச் சுற்றிக்கட்டியிருந்தனர். வீரம் நிறைந்த அப்பெண்டிரின் தன்மையினை,

**திண்பிடி ஒள் வாள்**
**விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர் (முல்லை., 46-47)**

என்பதன் வழி அறியப்படுகின்றது.

சங்கத் தலைவி இறப்பிற்கு அஞ்சவில்லை என்றும் இறப்பானது, தன்னையும் தன் தலைவனையும் பிரித்துவிடக் கூடும் என அஞ்சுவதாகவும் கூறுவதை,

**சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்**
**பிறப்புப் பிறிதா குவது ஆயின்**
**மறக்குவென் கொல்என் காதலன் எனவே (நற்., 387: 7-9)**

என்கிறாள்.

தன் தாய்வீட்டில் மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்த தலைவி, வறுமையிலும் தன் தலைவன் வீட்டிலிருப்பதையே விரும்புவதாக அமையும் பாடலில்,

**அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற்கீழ்**
**மானுண் டெஞ்சிய கலுழி நீரே (ஐங்., 204)**

என்கிறாள்.

தலைவன் பரத்தமை அறிந்தும், தோழியிடம் கூட தெரிவிக்காமல் தன்னுள் மறைக்கும் தன்மையினை,

**தண்ணந் துறைவன் கொடுமை**
**நம்முன் நாணிச் கரப்பா டும்மே (குறுந்., 9)**

என்பதால் அறியலாம்.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஒக்கூர் மாசாத்தியார் கூறும் பெண்பாற் புலவர்,

**கெடுக சிந்தைகடிது இவள் துணிவே மூதின்**
**மகளிர் ஆகுதல் தகும் (புறம்., 279: 1-2)**

போர்க்களத்தில் தன் தமையன், கணவன் ஆகியோரை இழந்த பெண், தன்னுடைய மிகவும் இளம் வயதுடைய மகனைப் போருக்கு அனுப்பும் நெஞ்சுரத்தினை இப்பாடல் தெளிவுறுத்துகின்றது. சங்கப் பெண்டிரின் கற்பு குறித்துக் கூறுகையில், **வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினள் (கலி., 2)** என்பர். அக்காலப் பெண்டிர் தம் திறத்தால் இயற்கையையே மாற்றும் வல்லமை பெற்றிருந்த தன்மையினை, **அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே (கலி., 39)** மகளிர் இருமணம் கொள்ளும் நிலையினை முற்றிலும் விரும்பாத நிலையினை,

**அருநெறி ஆயர் மகளிர்க்கு**
**இருமணம் கூடுதல் இவ்இயல்பு அன்றே (கலி., 114)**

எனும் அடிகளால் அறியலாம்.

விருந்தினர் இரவில் வந்தாலும் கூட, முகமலர்ச்சியுடன் பெண்டிர் விருந்தளித்த தன்மையினை,

**அல்லி லாயினும விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள் (நற்., 142: 9-11)**

எனும் அடிகள் காட்டுகின்றன.

தான் சமைத்த உணவைக் கணவன் உண்ணுமிடத்து, தான் உண்டதைக் காட்டிலும் மிகுந்த மனமகிழ்ச்சியடைந்த தலைவியின் நிலையினை,

**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., 167)**

**தொகுப்புரை**

"சங்கம் காட்டும் பெண்கள்" எனும் தலைப்பிலான இக்கட்டுரையில், அறிவு, நெஞ்சுரம், தெளிவு முதலான உயர்ப் பண்புகளின் கூட்டாகத் திகழ்ந்த பெண்பாற் புலவர்களின் திறத்தையும் காதல், அன்பு, கற்பு என வாழ்ந்த தொல்காப்பியம் மற்றும் சங்ககாலத் தலைவியரின் பண்புநலன்களையும், தோழி, செவிலி ஆகியோரின் சிறப்பினையும் தொல்காப்பியம் மற்றும் சங்கப் பாடல்களின் சான்றுகளின் ஊடாக நோக்கவியல்கின்றது.

**குறிப்புகள்**

[1] தட்சிணாமூர்த்தி, அ, முனைவர். *ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

[2] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[3] பாலசுப்பிரமணியன், கு. வெ. *புறநானூறு (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[4] பாலசுப்பிரமணியன், கு. வெ. *நற்றிணை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[5] பாலசுப்பிரமணியன், சி. *சங்ககால மகளிர்*. பாரி நிலையம், சென்னை, 1983.

[6] மோகன், இரா. முனைவர். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. புத்தகம் -1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[7] மோகன், இரா. முனைவர். *பத்துப்பாட்டு (மூலமும் உரையும்)*. புத்தகம் -2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[8] ராஜேஸ்வரி, ரா. முனைவர். "தொல்காப்பியப் பெண்டிர்." *தினமணி*, 2020.

[9] லெனின், க. முனைவர். "சங்க இலக்கியத்தில் வாழ்வியல் நோக்கில் பெண்கள்." *இனியவை கற்றல் பன்னாட்டுத் தமிழியல் மின்னிதழ்*, ஜூலை 2021.

[10] விசுநாதன், அ. முனைவர். *கலித்தொகை (மூலமும் உரையும்)*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 98, 2014.

[11] ஜெயக்குமாரி, ச. முனைவர். "சங்க இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை." *புதிய அவையம்*.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.